பனியன் தொழில் மற்றும் பின்னலாடைத் தொழிலில் ஏற்பட்ட e–Way Bill பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய திருப்பூர் மாவட்டத்திற்கு மத்தியக் கூட்டுறவு வங்கி வேண்டுமென்று கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். தனி மாவட்டம் என்று பிரித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 103 கோடி ரூபாய் ஒதுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைக் கட்டிக் கொடுத்து, ஒரு சிறந்த மாவட்டமாக, மாவட்டத்தினுடைய அதிகாரங்கள் அனைத்தையும் கொடுக்கிற ஒரு அமைப்பாக உருவாக்கினார்கள்.

அதற்குப் பிறகு, ஆவின் பாலகம், மத்தியக் கூட்டுறவு வங்கி, அச்சுக்கூடம், இதுபோன்ற அமைப்புகளெல்லாம் திருப்பூர் மாவட்டத்திற்குப் பிரித்து கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதால்தான் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே வைத்தேன். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைக் கண்டிப்பாக எங்களுக்குச் செய்துதர வேண்டுமென்கிற உத்தரவாதத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 283, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

283—

மின்மாற்றி

***13497—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

ஊத்தங்கரை தொகுதி, சந்திரப்பட்டி ஊராட்சியில் உள்ள வெள்ளிமலை நரிக்குறவர் குடியிருப்பு, வேடப்பட்டி, செங்கல்பட்டி மற்றும் கிட்டம்பட்டி கிராமங்களில் 100 KVA மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்திரப்பட்டி ஊராட்சியில் இருக்கின்ற நான்கு கிராமங்களுக்கு தலா 100 KVA மின்மாற்றிகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இரண்டு ஊராட்சிகளில் இப்போது அதிக மின்னழுத்தம் இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக 100 KVA மின்மாற்றிகளை மாற்றி அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

ஊத்தங்கரை தொகுதி, சந்திரப்பட்டி ஊராட்சியில் உள்ள வெள்ளிமலை நரிக்குறவர் குடியிருப்பு, வேடப்பட்டி, செங்கல்பட்டி மற்றும் கிட்டம்பட்டி ஆகிய கிராமங்களில் மின்மாற்றிகள் அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 284, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு நகராட்சி*